செ.வெ.எண்: 40 நாள்: 16.11.2016

## புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் சுமார் ரூ.60.34 இலட்சம் மதிப்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், ஆதனக்கோட்டை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று 568 பயனாளிகளுக்கு ரூ.60,34,887 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழக அரசு பொதுமக்களிடமிருந்து குறைகளை மனுக்களாக பெற்று தீர்வுகாணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒரு கிராமத்தை தேர்வு செய்து மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டம், ஆதனக்கோட்டை கிராமத்தில் இன்று (16.11.2016) மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 169 மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்முகாமிற்காக பெறப்பட்ட 48 முன் மனுக்களில், 30 மனுக்களும் ஏற்கப்பட்டும், 17 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டும், 1 மனு நிலுவையில் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்த அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம், திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு, சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக்கடன் தள்ளுபடி, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்களாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்களாகவும் உயர்வு, டாஸ்மாக் கடைகளின் விற்பனை நேரம் குறைப்பு மற்றும் 500 டாஸ்மாக் கடைகள் மூடல் உள்ளிட்ட 5 முக்கிய திட்டங்களை கையொப்பமிட்டு உடனடியாக நிறைவேற்றி உள்ளார்கள். மேலும் தமிழகஅரசு புதுக்கோட்டை மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் காவிரி கூட்டுக்குடிநீர்த்திட்டம் ரூ.610 கோடி அறிவிக்கப்பட்டு தற்பொழுது பெரும்பாலான பணிகள் முடிவுற்றதுடன் விரைவில் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் கிடைக்கப்பெறவுள்ளது.

மேலும் இம்முகாமில் வருவாய்த்துறையின் சார்பில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு ரூ.8000 மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 60 பயனாளிகளுக்கு ரூ.526000 மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும், 51 பயனாளிகளுக்கு ரூ.632500 மதிப்பில் இறப்பு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 5 பயனாளிகளுக்கு ரூ.5000 மதிப்பில் விதவை உதவித்தொகைக்கான காசோலைகளும், 2 பயனாளிகளுக்கு ரூ.2000 மதிப்பில் மாற்றுத்திறனாளி உதவித்தொகைக்கான காசோலைகளும், 18 பயனாளிகளுக்கு ரூ.970000 மதிப்பில் விபத்து / இறப்பு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 97 பயனாளிகளுக்கு ரூ.2115000 மதிப்பில் விலையில்லா வீட்டு மனைப்பட்டாக்களும், 133 பயனாளிகளுக்கு ரூ.301000 மதிப்பில் கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளும், 149 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தின் (பயறு) கீழ் 5 பயனாளிகளுக்கு முழு மானியத்தில் தலா ரூ.4000 மதிப்பில் உளுந்து இடுப்பொருட்களும், தேசிய உணவுப்பாதுகாப்பு திட்டத்தின் (அரிசி) கீழ் 1 பயனாளிக்கு மானிய விலையில் ரூ.35000 மதிப்பீட்டில் சுழல் கலப்பையும், 1 பயனாளிக்கு ரூ.3000 மதிப்பில் விசைத்தெளிப்பானும், 1 பயனாளிக்கு ரூ.600 மதிப்பில் கைத்தெளிப்பானும், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு தலா ரூ.30 மதிப்பில் தென்னங்கன்றுகளும், 7 பயனாளிகளுக்கு மண்வள அட்டைகளும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு மானிய விலையில் ரூ.8000 மதிப்பில் நிலப்போர்வையும், 1 பயனாளிக்கு ரூ.10000 மதிப்பில் வீரியரக காய்கறிகள்/ மிளகாய்களும், 1 பயனாளிக்கு ரூ.18750 மதிப்பில் திசு வாழையும், 2 பயனாளிகளுக்கு தலா ரூ.5625 மதிப்பில் பப்பாளி கன்றுகளும், 1 பயனாளிக்கு ரூ.5000 மதிப்பில் மிளகு கன்றுகளும், 1 பயனாளிக்கு ரூ.23697 மதிப்பில் ரெயின்கன்-ம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் 16 பயனாளிகளுக்கு ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவி தொகைக்கான காசோலைகளும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.15000 மதிப்பில் காதொலிக்கருவிகளும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.5000 மதிப்பில் காலிபர் கருவிகளும் என மொத்தம் 568 பயனாளிகளுக்கு ரூ.6034887 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

..2..

இம்முகாமில் வேளாண்மைத்துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், தோட்டக்கலைத்துறை, பள்ளிக்கல்வித்துறை ஆகிய துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் தகுதிகள் குறித்து அலுவலர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார்கள்.

மேலும் ஆதனக்கோட்டை வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மருத்துவ முகாமில் 85 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 527 கால்நடைகளுக்கு தாதுஉப்பு, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், தடுப்பூசி, செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் பிற சிகிச்சைகளும் வழங்கப்பட்டது.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் பொது சுகாதாரத்துறை மூலம் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த கண்காட்சியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., வேளாண் இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட திட்ட அலுவலர் (ஒ.கு.வ.தி) திருமதி.சிறியபுஷ்பம்மணிமேகலை, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சூரியகலா, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) (பொ) திரு.அருணாச்சலம் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**